## IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, HOSUR

MCOP NO : 01/2017

Deposition of : PW1

Solemnly affirmed and on date 21.06.2018 in accordance with the provision with the Act of 1983

| | | | |
|---|---|---|---|
| NAME | : Reghana | FATHER'S NAME | : |
| VILLAGE | : | TALUK | : |
| CASTE | : | CALLING | : |
| RELIGION | : | AGE | : |

முதல் விசாரனை:

நான் இம்மனுவின் மனுதாரர். முதன்மை நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை. அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது. விபத்தில் இறந்துபோனவர் என் மகன். என் தரப்பில் முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 விபத்து வாகனத்தின் பதிவு சான்றிதழ் ம.சா.ஆ.2 காப்பீட்டு பாலிசி ம.சா.ஆ.3 பர்மிட் ம.சா.ஆ.4 மோட்டார் வாகன ஆய்வறிக்கை ம.சா.ஆ.5 ஓட்டுநர் உரிமம் ம.சா.ஆ.6 இறந்தவரின் ஓட்டுநர் உரிமம் ம.சா.ஆ.7 இறந்தவரின் கல்வி சான்று ம.சா.ஆ.8 இறந்துபோனவரின் சம்பள சான்று ம.சா.ஆ.9 ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது. பிரேத பரிசோதனை அறிக்கை ம.சா.ஆ.10 வாரிசு சான்றிதழ் ம.சா.ஆ.11 மனுதாரரின் ஆதார் அட்டை ம.சா.ஆ.12 பேன் கார்ட் ம.சா.ஆ.13 வங்கி பாஸ் புத்தகம் ம.சா.ஆ.14. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

கு.வி.

என் மகன் பத்தாம் வகுப்பு வரை படித்திருக்கிறான். என் மகன் இறக்கும்போது அவனுக்கு வயது-24. மு.சா.ஆ.9 வருமான சான்று முறையானது அல்ல என்பதால் ஏற்க இயலாது என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்து நடந்த அன்று என் மகன்தான் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றான் என்றால் சரிதான். சிக்னலில் வாகனத்தை நிறுத்தாமல் ஓட்டி சென்று விபத்து ஏற்படுத்திவிட்டான் என்றால் சரியல்ல. மனுவிற்காக என் மகனின் வருமானத்தை அதிகபடுத்தி காட்டியுள்ளேன் என்றால்

சரியல்ல. என் மகன் பத்தாம் வகுப்பு படித்திருந்ததால் கூலியாக வேலை செய்தார் என்றால் சரியல்ல. அவருக்கு பின்னால் உயர் பதவி கிடைக்க வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகம் என்றால் சரியல்ல.

மறு விசாரணை-இல்லை.